JL

LLm21
M56
184358.

1243

# ஹோமியோ பிரகடனம்

# (HOMEO BULLETIN)

JULY 1956

1243

## இந்த பிரசுரத்தில்.

இந்தியாவிற்கு உகந்த வைத்தியம்
அனுபவகேஸ், பி. சி. ஜி.,
முக்கிய மருந்துகளின் திறவுகோல்கள்
மற்றும் பல.

ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்,
திருவாரூர்.

# ஹோமியோ பிரகடனம்.

## (HOMEO BULLETIN)

★

மாதாமாதம் பிரதி ஆங்கில மாதம் முதல் தேதி
வெளியிடப்படும்.

★

**சந்தா விபரம் :**

வருடச் சந்தா ரூ. *3/-*

தனிப் பிரதி அணா *0-4-0.*

★

***வெளியிடுபவர் :***

***பிரின்ஸ்பால் S. SRINIVASAN,***

*ஹோமியோ பிஸிஷியன் & ஸர்ஜன்,*

ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்,

**திருவாரூர்.**

# ஹோமியோ பிரகடனம்.

"யஸ்ச ஆமயோ பூதானாம் யேன ஜாயதே ஸ்வப்ரத
தேஷாம் ஹி ஆமயம் திரவியம் ந புனதி சிகித்சிதம்!"

மஹாபாரதம்

1956 ஜூலை - மாதம்.

## பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| இந்தியாவிற்கு உகந்த வைத்தியம் | .... | 5 |
| அலோபதிக் பெனிசிலின் விஷத்தன்மை (அனுபவ கேஸ்) | | 7 |
| பி. ஸி. ஜி. ( B. C. G. ) | .... | 9 |
| முக்கிய மருந்துகளின் திறவுகோல் | .... | 13 |
| 15-வது நேர்முக வகுப்பு | | 16 |
| [illegible]ண்மை அறிவிப்பு | ... | 17 |



184358
600 013


## சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்.

உங்கள் ஆதரவையும், அன்பையும் பெற்றே இம்மாத பிரகடனம் வெளியிடப்படுகிறது. உங்களுக்கும் ஹோமியோபதிக்கும் தொடர்ந்து, பயன்படத்தக்க முறையில் சேவை செய்வதற்கு உங்கள் ஆதரவு பரிபூரணமாக தேவை.

உங்கள் சந்தாத் தொகையை தவறாமல் அனுப்புவதுடன், உங்கள் நண்பர்கள் அனைவரையும் இதன் சந்தாதாரராகச் சேர்ப்பித்து வைக்கவும்.

தமிழ் நாட்டிலேயே சிறந்த முறையில் உங்களுக்குப் பணியாற்ற நீங்கள் ஒத்துழைப்பது மிக அவசியமாகிறது.

ஆசிரியர்.

## உங்கள் அறிவையும், அனுபவத்தையும் வளரச்செய்யும்

# ஹோமியோ பிரகடனத்தின்

## சந்தாதாரராக நீங்கள் சேர்ந்துவிட்டீர்களா?

இல்லையென்றால் உடனே கீழ்க்கண்ட பாரத்தை பூர்த்திசெய்து உடனே ரூ. 3/- வருஷ சந்தாவை அனுப்பிவையுங்கள்.

**தென்னிந்தியாவிலேயே சிறந்ததொரு மாதப் பிரகடனம் இதுதான்.**

நெ. தேதி..........................

பெயர்..........................................................................................

முழு விலாசமும், தொழிலும் } ..........................................................................

சந்தாத் தொகை......................ம. ஆ. நெ....................

# இந்தியாவிற்கு உகந்த வைத்தியம்

"ஒரு நாட்டின் வளப்பமும், வளர்ச்சியும்; மக்களின் ஆரோக்கியத்தைப் பொறுத்திருக்கிறது."

நம் நாட்டின் பொது சுகாதாரம் மிக்க முக்கிய பிரச்னையாகிவிட்டது. தேசத்தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் சொன்னபடி "மருந்து மக்களின் சமூக, பொதுநலப்பணியின்கண் மிக்கவுயர்ந்ததாகும்" என்பது மறக்கத்தக்கதன்று. கிராம சமூக ஆரோக்கியத்திற்கு உகந்த முறை எதுவென்பதை பறைசாற்ற மேடையின்கண் ஏறிப் பேசுவோர் பலர் மந்திரிகள் முதல், மருத்துவர்கள் பலர் இப்பிரச்னையை அலசுகின்றனர். ஒருவர் M. B. B. S. தான் வேண்டுமென்றால், மற்றொருவர் L. M. P. அல்லது 2 வருடகாலப் பயிற்சி போதுமென்கிறார்.

35·7 கோடி ஜனத்தொகையில், சுமார் 5,00,000 கிராமங்களில் 75—90 சதவிகிதம் மக்கள் வசிக்கிறார்கள். மொத்தம் பட்டம் பெற்ற அலோபதிக் டாக்டர்கள் 50,000-த்தில் 45,000 நகரங்களில் வசிக்கிறார்கள். இவையெல்லாம் புள்ளிவிவரங்கள்.

மலேரியாவினால் ஆண்டிற்கு 20 லக்ஷம் சாவுகளும்; க்ஷயத்திற்கு 5 லக்ஷம் சாவுகளும; மற்ற வியாதிகளினால் 45 லக்ஷம் மரணமும ஏற்படுகின்றன. சிசுக்கள் சுமார் 48% 10 வயதிற்குள் மரிக்கின்றன. தாய்மார்கள் 2 லக்ஷமும் மரிக்கின்றனர். தொத்து நோய்களாலும், மற்ற காரணங்களாலும் 20 லக்ஷம் குருடர்கள உற்பவிக்கின்றனர். குஷ்டத்தினால் 12 லக்ஷமும். துர்வியாதிகளினால் எண்ணிலடங்காதவர்களும உளர்.

ஆகவே நாட்டிற்கு ஏராளமான பொருளாதார நஷ்டம் ஏற்படுகிறது. உதாரணமாக மலேரியாவினால ஏற்படும் மரணத்தினால் மட்டும் 20 கோடி ரூபாய் (Sinton) நஷ்டம் ஏற்படுகிறதாம்.

ஆகவே நாட்டின் மருத்துவ சேவைக்குத் தேவை என்ன?

ஒரே வழி ஹோமியோபதி முறைதான். போர் கமிட்டியின் சிபார்சுப்படி 1000 கோடி ரூபாய் மூலதனம் வேண்டும். ஆனால் அதை நடத்த தற்காலம் நம் நாட்டிற்கு பண வசதி இல்லை. முக்கிய பிரச்னைகளான, உணவு, நீர்ப்பாசனம், தொழில் முன்னேற்றம், கட்டிடம் முதலான முக்கிய காரியங்களுக்காக, போர் கமிட்டி சிபாரிசு அமுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் சர்க்கார் நாம் (ஹோமியோபதியர்கள்) எவ்வளவு எடுத்துக்கூறியும் ஒருதலைப்பட்சமாகவே நம்மை அனுமதிக்கின்றனர். தற்காலம் 3 லக்ஷம், தமிழ் நாட்டில் மட்டிலும் சுமார் 6000 ஹோமியோபதியர்கள்தான் கிராம மக்களின் சுகாதார நலத்தை காப்பாற்றுகின்றனர். 1949 ஆண்டு ஹோமியோபதி என்குயரி கமிட்டி சிபாரிசுப்படி சீக்கிரமே இருக்கும் ஹோமியோ வைத்தியர்களை 'B' கிளாசிலாவது ரிஜிஸ்தர் செய்துகொண்டு மேற்கொண்டு ஆவன செய்யவேண்டியதவசியம்.

நமது தலைவர் திருவாரூர் டாக்டர் சீனிவாசன் பலதடவை சொற்பொழிவாற்றியபடி ஆங்காங்கே ஹோமியோ மருத்துவ நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும். மத்திய பாகத்தில் ஒரு பெரிய ஆஸ்பத்திரி பல படுக்கை வசதியுடன் கூடியதாக நிறுவ வேண்டும். அங்கே மக்களுக்கு பணிபுரிந்து ஹோமியோபதியை நிலைபெறச் செய்யவேண்டும். இல்லையேல் நாம் அழிவது திண்ணம்.

ரஷியா தேசத்தின்கண் செய்திருப்பதுபோல் உயர்தரப்பள்ளி படிப்பு முடிந்தபின்னர் 2 ஆண்டுகளாவது ஹோமியோபதி வைத்தியத்தை கற்றறிந்து மக்களுக்கு சேவை செய்தால் போதும். இதை சர்க்கார் கவனிக்குமா?

— எடிட்டர்.

# அலோபதிக் 'பெனிசிலின்' விஷத்தன்மை அனுபவ கேஸ்.

போனதடவை நம் பத்திரிகையில் அலோபதிக் பெனிசிலின் விஷத்தன்மை மரணம் சம்பவிக்கும் அளவிற்குக்கூட ஏற்பட்டுவிட்டதென்று கூறினோம். அதற்கு ஜப்பான் தேசத்திலிருந்து வந்த அதிகாரபூர்வமான அறிக்கையைத் தெரியப்படுத்தியிருந்தோம்.

இங்கிலாந்திலிருக்கும் மேயர் (Mayer—1953) (Pick and Patterson—1953) பிக்; அண்டு பேட்டர்சன் முதலியவர்கள் 'பெனிசிலின்' இன்ஜெக்ஷன் சதைக்கடியில் கொடுத்தவுடனேயே மரணம் சம்பவித்திருக்கிறது என்று கூறி அதிஜாக்கிரதையாக பெனிசிலினை உபயோகப்படுத்தவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அவர்களின் அனுபவம் மற்றும் பல பிரபல டாக்டர்களாலேயும் அறியப்பட்டிருக்கிறது

வாய் மூலம், அல்லது மேலுக்கும், அலோபதிக் பெனிசிலினை உபயோகப்படுத்திவருவதிலும் விஷத்தன்மையுள்ள கோளாறுகள் ஏற்படுகின்றன என்று தெரியவருகிறது. 'Cross' (கிராஸ்) என்பவர் பெரும்பாலும் நாக்கு நிறம் மாறுபட்டுப்போதலும்; வாய்ப்புண்கள் அடிக்கடி ஏற்படுவதும், பெனிசிலின் உள்ளுக்குச் சாப்பிடுவதால் ஏற்படும் கோளாறுகள் என்று இயம்புகிறார்.

அலோபதிக் முறையில் உபயோகப்படுத்தப்படும் பெனிசிலின், ஸ்டாப்டோமைசின், ஆரோமைசின், டெர்ராமைசின், நியோமைசின், க்ளோரோமைசிடின், முதலான ஆண்டி பயோடிக்ஸின் உபயோகமற்ற தன்மையைப்பற்றியும், அவைகளால் ஏற்படும் தீமைகளைப்பற்றியும் கூறப்புகின் அதற்கு தனியாக ஒரு புத்தகமே ஆகும். ஆதலின் அவற்

றைக் கூறாமல் தற்போது நிறுத்திக்கொண்டு ஒரு உதாரண கேஸ் மாத்திரம் கூறுவோம் :—

**ஆண் : வயது-23 / 1955.**

இவருக்கு துர்நடத்தையினால் ஆண்குறியில் புண் ஏற்பட்டது. அதை ஒரு அலோபதிக் டாக்டரிடம் காட்டினார். அந்த டாக்டர் உடனே 'பெனிசிலின்' (புரோகேன் கூடினது) சுமார் 10 ஊசி தொடர்ந்தாப்போல போட்டார். அத்துடன் ஸல்பா தயோசால் மாத்திரைகளும் கொடுக்கப்பட்டன.

புண் ஆறிவிட்டது. ஆனால் பரிதாபம்! ஒரு மாத காலம் கழித்து அவர் உடம்பு மிக்க பலவீனமடைந்து, சோகை ஏற்பட்டுவிட்டது. உடம்பு முழுவதும் ஊதி உடம்பெல்லாம் தடிப்பு தடிப்பாக தினவுடன்கூடிய சிவப்பு தடிப்புகள் உண்டாகிவிட்டன. அலோபதிக் டாகடர் மறுபடியும் இது 'புரோகேன்' என்ற விஷமருந்தினால உண்டானது என்றுகூறி 'கால்சியம்' இன்ஜக்ஷன்கள், விடமின்கள் முதலியன கொடுத்தார்.

பாவம்! அந்த தடிப்புகளும் மறையவில்லை— கால், கைமூட்டுகளில் சிறிது வீக்கமும், வலியும் உண்டாகிவிட்டன. இப்பொழுதுதான் நம் டாகடரிடம் வந்துசேர்ந்தார்.

வியாத் :—அவர் வியாதி பென்சிலினால் வந்தது தான் என்று கூறப்பட்டது. 99 சத விகிதம அலோபதிக் டாக்டர்களுக்கு, ஏதோ இரண்டு பெனிசிலின் குத்தினால் போதும் நமக்கேன் வியாதியைப்பற்றி கவலைப்படவேண்டும் என்றுதான் அபிப்பிராயமிருக்கிறது. அத்துடன் பெரும்பாலான அலோபதிக் டாக்டர்களுக்கும் ஆண்டி பயோடிக்ஸ் உபயோகப்படுத்தும் சரியான வழியே தெரியாது.

[தொடரும்]

# பி B சி C ஜி G !

(Dr. N. சிவானந்தம், சென்னை-1)

★

க்ஷயரோக நோயை, பிரபல்யமான இருமல் நோய் என்றும் சொல்லலாம். அது பல நாடுகளிலும் பரவிக்கிடக்கிறது. இந்தியாவில் 100-க்கு 50 பேரிடம் இந்நோய் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். நேரிடையாக நோய் முற்றிய பிணியாளர்களும், மறைமுகமாக நோய்க்கிருமிகள் உடலினுள் புகுந்து விருத்தியாவதற்குரிய சூழ்நிலையை எதிர்நோக்கி காத்திருக்கும் நிலையிலுள்ளவர்களும் இதற்கு ஆளாகிறார்கள்.

சத்தில்லாத உணவு, ஆகாரக் குறைவு, ஜனநெருக்கமும், காற்றோட்டமும் இல்லாத வீடுகளில் வசித்தல், அதிக உழைப்பு, மனக்கவலை, பொருளாதாரக் கஷ்டம், இவைகளால் இந்நோய் வெகு விரைவில் வளரும். அளவுக்கு மீரிய காமவேட்கை, திருப்தியில்லாத மண வாழ்க்கை, நீண்ட காலம் விவாகமின்மை, அடிக்கடி பிள்ளைப்பேறு இவைகளும் இந்நோய் அபிவிருத்தியடைய காரணங்களாகலாம். இதனாலே நமது நாட்டில் பெரும்பான்மையாக இளம் நங்கைகள் இந்நோயால் மரணமடைகிறார்களாம்.

## நோயின் அறிகுறிகள்.

இந்நோயின் ஆரம்பத்தில் தேகத்தின் எடை குறையும், காலை நேரங்களில் காய்ச்சல் வரும், கொஞ்சதூரம் நடந்தாலும் மேல்மூச்சு வாங்கும். பலஹீனமும், புஜத்தின் மூட்டுகளினுள் வலி காணும், உணவில் வெறுப்பும், வாந்தி வருவது

போன்ற குமட்டலும் உண்டாகும். இதற்குப் பின்னர்தான் இருமல் ஏற்பட்டு, கஷ்டத்துடன் தூசு படிந்த நிறத்தில் சளி வரும். அச்சளியில் க்ஷயரோகக் கிருமிகள் நீந்துவதை பரிசோதனைக் கண்ணாடி மூலம் பார்க்கலாம். நோய் முற்றிவிட்டால் சளியுடன் இரத்தமும் கலந்து வெளிப்படும். நுரையீரல், குடல், எலும்பு முதலான சரீரத்தின் மற்ற பாகங்களையும் பிடிக்கும் க்ஷயரோக வகைகளுமுண்டு. இவைகளுள் நுரையீரலைத் தாக்குவது தான் முக்கியமானது.

## பரிகாரம்.

அல்லோபதி முறைப்படி, இந்நோய்க்கு சிகிச்சை செய்துகொள்ள, குறைந்தது ஆறுமாத கால ஓய்வும், ஒரு ஆயிரம் ரூபாயுமாவது தேவைப்படுமாம். அல்லோபதி மருந்துகள் அத்தனை விலை உயர்ந்ததாம்! அத்துடன் சத்துள்ள ஆகாரமான பால், பழம், முட்டை, மாமிசம், சூப்பு என்றும் அன்றாடம் உட்கொண்டாக வேண்டுமாம். நீண்டகால ஓய்வு, விலை உயர்ந்த மருந்துகள், சத்துள்ள உணவு வகைகள் முதலான வசதியுடன் சிகிச்சை செய்து கொள்ள தனவந்தர்களால் தானே முடியும்? ஆதலால், இந்நோய்க்கு பணக்காரர்களின் வியாதி என்றும் பெயர் சூட்டியிருக்கிறார்களாம்.

நமது நாடோ, ஏழை எளியவர்களே அதிகமுள்ளது. பெரும்பாலான மக்கள் காற்றோட்டமில்லாத குடிசைகளில் நெருக்கமாக வசிக்கவேண்டிய சூழ்நிலையிலிருந்து வருகிறார்கள். சத்துள்ள உணவை வாங்க போதுமான வருவாயற்றவர்கள். இந்த பரிதாபகரமான நிலையிலுள்ளவர்களே இந்நோய்க்கு ஆளாக நேரிடுகிறது. இவர்கள் எப்படி க்ஷயரோக சிகிச்சை செய்துகொள்வது?



எனவே, அரசாங்கத்தாலும், சில தனவந்தர்களாலும் ஏற்படுத்தப்பட்டுள்ள க்ஷயரோக நிலையங்களுக்கும் போகிறார்கள். போதுமான க்ஷயரோக நிலையங்கள் நமது நாட்டில் இல்லாததால், பெரும்பாலான மக்கள் சிகிச்சையின்றியே கிடக்கிறார்கள். க்ஷயரோகம் வந்தபின் சிகிச்சை அளிப்பதைவிட, க்ஷயரோகம் வருமுன்பே, அதைத் தடை செய்யும் நோக்கத்துடன். நமது தேசத்திலே சில ஆண்டுகளாக. க்ஷயரோக தடுப்பு ஊசியான பி. சி. ஜியைப் புகுத்தினார்கள் முதலில் இந்த பி சி ஜி என்பது என்ன, எப்படி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்வோம்.

## பி. சி. ஜி. என்றால் என்ன?

**Bacille** என்ற க்ஷயரோக விஷக்கிருமிகளாலேயே, க்ஷயரோக தடுப்பு ஊசியை கால்மெட், **(Callmette)** கொரின் **(Guerin)** என்ற இருவர்களும் கண்டுபிடித்ததால், இந்த தடுப்பு ஊசிக்கு **Bacille, Callmette. Guerin** என்று [illegible] வைத்தார்கள். இதன் ஆங்கில சுருக்கமே B. C. G. (பி, சி, ஜி.)!

## கண்டு பிடித்தது எப்படி?

184358

சுமார் நாற்பத்[illegible] ஆண்டுகளுக்கு முன் பிரான்சு தேசத்திலே [illegible] ஆராய்ச்சி சாலையைச் சார்ந்த ஆல்பர்ட், கால்மெட், [illegible]ஸோ, கொரின் என்ற இரு மருத்துவ போதகர்கள், அம்மை, காலரா, பிளேக் முதலிய நோய்களுக்கு தடுப்பு ஊசிகள் இருப்பதுபோல க்ஷயரோகத்திற்கும், ஒரு தடுப்பு ஊசியைக் கண்டுபிடிக்க சங்கற்பம் மேற்கொண்டு, ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.

அவர்களுடைய சோதனைச் சாலையில் கொடிய க்ஷயரோகக் கிருமிகளை வளர்த்து, அதன் தன்மைகளை ஆராய்ந்தார்கள். ஆயிரம் ஐநூறு என்ற எண்ணிக்கை கிருமிகள் கொண்ட ஒரு ஊசி ஒரு எலியின் உடலில் க்ஷயரோக நோயை உண்டாக்குமானால், இருநூறு, நூறு என்று குறைந்த எண்ணிக்கை கிருமிகளால் அந்நோயை உண்டாக்க முடியுமா? என்றும் சோதனை செய்தார்கள். எவ்வளவு எண்ணிக்கையைக் குறைத்த போதிலும் அவை வல்லமையுடன் க்ஷயநோயை உண்டுபண்ணி விடுவதை அறிந்தார்கள்.

கிருமிகளின் எண்ணிக்கையை குறைப்பதாலும் பலன் இல்லை என்பதைக் கண்டதும், கிருமிகளின் பலத்தைக் குறைத்துப் பார்க்க, சோதனைக் குழாய்களில் அதிக உஷ்ண சீதோஷ்ண நிலையில் வளர்த்துப் பார்த்ததில் அக்கிருமிகளின் வளர்ச்சி தடைப்பட்டு வல்லமை குறைந்ததாம்.

வல்லமை குறைந்த கிருமிகளை எலிகளின்மேல் சோதனை செய்து பார்த்தபோது, அவைகள் க்ஷயநோயை உண்டாக்கும் சக்தியை இழந்திருப்பதையும், அதே நேரத்தில் க்ஷயரோக தடுப்பு சக்தியை உடலில் தோற்றுவிக்கும் தன்மையுடன் மட்டும் இருந்ததையும் கண்டார்களாம். எனவே, பக்குவப்படுத்தப்பட்ட உயிருள்ள க்ஷயரோகக் கிருமிகளை ஊசியின் மூலம் உடலில் ஏற்றப்படுவதால், க்ஷயரோகத்திற்கு ஆளாகக்கூடியவர்கள் எவ்வித ஆபத்துமின்றி எதிர்சக்தியுடையவர்களாக மாற்றப்பட்டு விடுகிறார்கள் என்ற முடிவிற்கு வந்தார்களாம்.

[தொடரும்]

பிரசுர உரிமை A.T.H.M.A பெற்றது.

# முக்கிய மருந்துகளின் திறவுகோல்

மூலம்: H. C. அல்லன், M. D.
தமிழாக்கம்: Dr. G. L. பிரகாசம்.

## 21. APOCYNUM CANNABINUM
### (அபோசினம் கனபின்னம்)

மூத்திரமும், வியர்வையும் மட்டுப்படுதல். ஜனனேந்திரியங்களின் நீர்ச்சுரப்பு; அழற்சியடைதல்.

பாண்டுவீக்கம்:— தாகத்துடன் (அசிட்டிக் ஆசிட்), தண்ணீர் ஒத்துக்கொள்வதில்லை அல்லது வாந்தியாகுதல் (ஆர்ஸ.); அநேக வியாதிகள் சிக்கலின்றி இருத்தல, டைபஸ்; டைபாயிடு; சிவந்த சருமத்துடன் சுரம்; கொயினாவை தாறுமாறாக உபயோகித்தபின்.

தலையில் நீர் தேக்கம், ஒரு கண் பார்வை போகுதல்; தொடர்ந்து தண்ணீர் போன்று மலம் வெளியாகுதல்; தொடர்ந்து ஒரு கை, ஒரு கால் ஆடிக்கொண்டே இருத்தல் (இடது பக்க கை, கால், பிரை).

மாதவிடாய் இல்லாமை: வாலிப பெண்களுக்கு சோகை அல்லது பாண்டு சம்பந்தமாக தோற்றமளித்தல்.

பெரும்பாடு: தொடர்ந்து அல்லது விட்டு விட்டு வரும் இரத்தப்போக்கு; நாடி அடிப்பு; இருதய

4. வாஸ்தவமாகவே மருந்துகள் விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டதை வாங்க விரும்புகிறீர்களா?

அப்பொழுது திருவாரூர் லாபரடரி ஒன்றில்தான் ஹோமியோபதி டிஞ்சர்களும், தாய்த் திராவகங்களும், இன்ஜெக்ஷன்களும், மாத்திரைகளும் தயாராகின்றன என்பதை இன்றுவது தெரிந்துகொள்ளுங்கள்.

திருவாரூரில் தயாராகும் ஹோமியோபதி இன்ஜெக்ஷன்கள்தான் வலியில்லாதவை, குணமுள்ளவை, உத்திரவாதமுள்ளவை. பரீக்ஷித்துப் பாருங்கள்.

5 ஹோமியோபதி முறை ஒன்றுதான் சுகப் பிரசவத்திற்கு பெயர்பெற்றது. ஆகவே பிரசவ சிகிச்சை அறியவேண்டியது அவசியம்.

அப்படியானால் திருவாரூர் டாக்டர் ஒருவர்தான் உங்களுக்கு பிரசவ சிகிச்சையைப் பற்றி உண்மையிலேயே போதிக்கமுடியும். மற்றவர்களுக்கு அனுபவம் கிடையாது என்பதும் உண்மைதான்.

உண்மையறிந்து உங்கள் நேர்முக அறிவையும் தபால் பாட அறிவையும் வளர்த்திக்கொள்ளுங்கள். மற்றைய இன்ஸ்டிட்யூட்களில் படித்தவர்கள் நூற்றுக்கணக்கில் திருவாரூரில் வந்து மறுபடியும் கற்றுக்கொள்ளுகிறார்கள் என்பதே அத்தாக்ஷி.

**ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்,**

திருவாரூர்.

★

## சில ஸ்பெஷல் தயாரிப்புகள்:

**ஆர்னிகா ஹேர் ஆயில்** (மயிர் வளரும் டானிக்)
ஸ்பெஷல் 4 அவுன்ஸ் பாட்டில் ரூ. 2—8—0

**காந்தாரிஸ் ஹேர் ஆயில்** (மயிர் வளரும் டானிக் ஆயில்)
4 அவுன்ஸ் 2—4—0

**அல்பால்பா டானிக்** 4 அவுன்ஸ் 2—8—0

**போலிரம்** (போலிக் ஆசிக், இரும்பு கலந்தது)
100 மாத்திரை 2—0—0

**பெனிசிலின் 30x** 1 டிராம் 0—8—0

**ஸிலிகா மரீன 1x** 100 மாத்திரை 1—0—0

**டீலிவரீஸி** (சுகப் பிரசவ மருந்து)
ஸெட் 9—0—0

**மகரத்வஜா 3x**
(சிறந்த தாதுபுஷ்டி, ரத்த சுத்தி டானிக்)
100 மாத்திரை 4—0—0
தங்கம் கலந்தது ,, 5—0—0

**அஸ்வகந்தா 1x** (மூளை நரம்புக்கு சிறந்த டானிக்; ஞாபக மறதி, நரம்புத் தளர்ச்சி, பக்கவாதத்திற்கு)
2 அவுன்ஸ் 1-12-0

**பைனலின் டானிக்** (மதுமேகம், வெள்ளை, வெட்டை, இந்திரிய ஸ்கலிதம், இவற்றிற்கு சிறந்த டானிக்)
3 அவுன்ஸ் பாட்டில் 2—8—0

★

## அலோபதி மருந்துகள்.

**பயோலாக்ஸ்** (பேதி மாத்திரை) 100 – 3—0—0

**பயோ பெர்ரின்**
(இரும்பும் வைடமின் 'பி'யும் சேர்ந்தது)
100 – 1-10—0

**பயோப்ளக்ஸ்**
(வைடமின் 'பி' காம்பிலக்ஸ் எல்லா சத்தும்)
100 - 3—12—0

**பைபோலின்**
(வைடமின் பி12, போலிக் ஆசிட் சேர்ந்த ரத்த விர்த்தி டானிக் மாத்திரை) 50 - 6—0—0

**ஸெர்பன்டினா** (நவீன ரத்தக் கொதிப்பு மருந்து)
100 மாத்திரை 2—8—0

**ஸ்கார்பின்** (வைடமின் 'சி') 100 மாத்திரை 3-12—0

**ஸ்பாஸ்மோடின்** (ஸ்பெஷல் ஆஸ்த்மா மாத்திரை)
25 - 2-10—0

**

## ஹார்மோன்கள்.

(தாது விர்த்திக்கு நிகரற்றவை)

**டெஸ்டிரான் 3x** (ஆண் தாது சத்து)
100 மாத்திரை 2—4—0

**ஈஸ்டிரால் 3x** (பெண் தாது சத்து)
100 மாத்திரை 2—0—0

---

**பயோ பாஸ்பேட்ஸ்**
(இரும்பு சத்து டானிக்) 4 அவுன்ஸ் 3—0—0

**லாஷோன்** (ஸ்திரீ வியாதிகளுக்கு சிறந்த டானிக்; வைடமின் சத்துக் கூடியது)
4 அவுன்ஸ் 2—0—0

**ஷார்க் ஆரஞ்சு** (வைடமின் A, D, B, C கூடிய மீன் எண்ணெய் டானிக்; இனிப்பானது) 8 அவுன்ஸ 3—4—0

**பெர்ரோசைம்** (ஈரல் சத்தும், வைடமின் பி, பி12, முதலியன கலந்த டானிக்)
8 அவுன்ஸ் 4—8—0

## புதிய மருந்துகள்.

எப்பொழுதும் நம் லாபரடரியில் புதுப்புது மருந்துகளை ரிசர்ச் மூலம் பரிசோதனை செய்து ஹோமியோபதி, அலோபதி டாக்டர்களுக்கு பிரயோசனப்படுத்தி வருகிறோம். இதற்குத் தகுந்த வசதிகள் நம்மிடம்தான் உள்ளன.

நாம் ஒருவர்தான் மருந்துகளை இங்கேயே தயார்செய்கிறோம்.

உதாரணமாக:— (1) (Aconite Napelless) அகோனைட் செடி என்றால் எப்படி கண்டுபிடிக்கிறது. அது சரியான அகோனைட்தானா என்று விஞ்ஞான ரீதியாக பரீக்ஷை செய்துகொள்ள வசதி நம் லாபரடரியில் மட்டும தானிருக்கிறது. பாக்கி ஸ்தாபனங்கள் வெறும் போலிகளே.

(2) நேட்ரம் ஸல்பியூரிகம்:— என்றால் என்ன உப்பு; அதை எப்படி தயார்செய்து சுத்தப்படுத்துவது; என்றெல்லாம் வசதியுடையவர்கள் எங்கள் லாபரடரி ஒன்று மட்டும்தான். மற்ற ஸ்தாபன நிர்வாகிகளுக்கு அந்தோ பரிதாபம் வேறெதனுடனாவது கலந்துவிட்டால் கண்டுபிடிக்கக்கூடத் தெரியாது.

(3) வைடமின் பி12—அப்படி என்றால் என்ன? அது என்னவிதமான போஷாக்கு சத்து அதை எப்படித் தயாரிப்பது உபயோகப்படுத்துவது என்றெல்லாம் வசதியுடன் கூடியவர் நம் லாபரடரி ஒன்றுதான். பாக்கி இன்ஸ்டிட்யூட்காரர்களுக்கும் இதற்கும் வெகுதூரம்.

இதெல்லாம் ஏன் இப்பொழுது சொல்லவேண்டி வந்ததென்றால் பலருக்கு உண்மை தெரியாமலிருப்பதேயாம். உண்மை தெரியாததினால் போலி ஸ்தாபனங்களின் மருந்துகளை வாங்கி வீணாகக் கெட்ட பெயர் வாங்கிக்கொள்ளுகிறார்கள்

# முக்கிய புதிய மருந்துகள்.

(1) பைபோலின் 12:— இதில் பி12 போலிக் ஆஸிட் (இது ஒருவித வைடமின் பி சத்து) முதலியன சேர்ந்திருக்கிறது.

மிக உயர்ந்த ரத்த சோகை நிவாரணி: எல்லா விதமான கிராணிக் கழிச்சல், ரத்த சோகை, பசியின்மை, நரம்புத் தளர்ச்சி முதலியவற்றிற்கு சிறந்தது.

1 c. c. ஊசிகளாகவும், மாத்திரைகளாகவும் கிடைக்கும்.

ஊசி: தினம் ஒன்றுவீதம் இன்ட்ரா மஸ்குலராக 12 வரையில் கொடுக்கலாம்.

மாத்திரை: தினம் 3 வேளைவீதம் கொடுக்கவும்.

6 x 1 c. c. பெட்டி ... ... ரூ. 4—0—0

மாத்திரை 25 கொண்ட பாட்டில் ரூ 4—0—0

(2) ஸ்டில்பிஸ்ட்ரால் 3x:— இது பெண் அவயவங்களிலிருந்து எடுத்த உயிர்ச்சத்து.

உபயோகம்:— மாதவிடாய் நின்றிருத்தல், சீக்கிரம் ருதுவாகாமை, மாதவிடாய் காலத்தில் வலி, மாதவிடாய் தள்ளி அகாலத்தில் ஏற்படுதல், பெண்கள் உடம்பு வளர்ச்சிக் குறைவு, அசதி, பலவீனம், ஹிஸ்டரியா முதலியன.

மாத்திரை 100 கொண்டது ரூ. 3—8—0.

★

## 'ஸ்டிங்கம்' (நீலர்)

தேள் கொட்டுக்கும், விஷப் பூச்சிகளின் கடிக்கும் நிகரற்ற நிவாரணி.

**உபயோகம்:—** கொட்டோ, கடியோ எந்த இடத்தில் இருந்தாலும், இரண்டு கண்களிலும் இரண்டு துளிகள் விடவும். இரண்டே நிமிடங்களில் மறைந்துவிடும்.

இந்த மருந்தை இரண்டு காதுகளிலும்விடலாம். யாதொரு கெடுதலும் செய்யாது

¼ oz. பாட்டில் விலை 0—5—0

1 oz. பாட்டில் விலை 0-11—0

★

## 'ஸ்டிங்கம்' (இன்ஜெக்ஷன்)

இது தேள் கடிக்கு மிகச் சிறந்த நிவாரணி. கொட்டு வாயைச் சுற்றி 1 c. c. அளவு ஸப்குடேனியஸாக கொடுத்துவிட்டால் வலி இரண்டு நிமிடங்களில் பறந்துபோம்.

இது ஒரு நம்பகமான இன்ஜெக்ஷன்.

6x 1 c. c. கொண்ட பெட்டி ரூ. 7—0—0

★

## FOLIRUM (போலிரம்)

இது நவீனமாய் கண்டுபிடிக்கப்பட்ட 'போலிக் ஆசிட்' (Folic Acid) என்ற வைடமின் 'பி' சத்தும், அயமும் சேர்ந்த ஒரு சிறந்த இரத்த விருத்தி மருந்து.

மாத்திரை ரூபத்தில் தற்போது கிடைக்கும். ஹோமியோபதி முறைப்படி தயார்செய்யப்பட்டது.

முறை:-1 அல்லது 2 மாத்திரை சாப்பாட்டிற்கு பின்னர் சிறிது ஜலத்துடன் உட்கொள்ளவும்.

100 மாத்திரை கொண்ட பெட்டி ரூ. 3-0-0

**ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட், திருவாரூர்**

# மகரத்வஜா 3X.

(தங்கம் சேர்ந்தது—அல்லது சேராதது)

மாத்திரை ரூபத்தில் கிடைக்கும்.

முறை:—தினம் 4 வேளை—ஒரு மாத்திரை வீதம் சிறிது தண்ணீருடன் சாப்பாட்டிற்கு பின்னர் சாப்பிடவும்.

உபயோகம்:—கடும் வியாதிக்குப்பின்னர் உடம்பு பலவீனத்திற்கு இதை டானிக்காக உபயோகப்படுத்தலாம். ஹிருதய வியாதிகளுக்கும், பலவீனத்திற்கும் நிகரற்றது.

குடல் சரியாக வேலை செய்ய சக்தியில்லாமல் மலச்சிக்கல் ஏற்பட்டால் இதை உபயோகிக்க மலமிளக்கும். குடலில் வாய்வு தங்குவதினால் ஏற்படும் வியாதிகளுக்கும் உகந்தது.

ரத்த சோகைக்கும், க்ஷயம் முதலிய வியாதிகளிலும்; சிகப்பு ரெத்த கெபிகள் குறைவடைந்திருந்தாலும், உடல் எடை குறைந்து இளைப்பு ஏற்பட்டாலும் இதைக் கொடுத்துவர மிகவும் நன்மை உண்டாகும்.

காதில் நாட்பட்ட சீழ்வருதல்; அடிக்கடி வாயில் புண்; சொரி சிரங்கு; கரப்பான் முதலியவற்றிற்கும் நல்லது.

தங்கம் சேர்ந்த மருந்து தாது புஷ்டிக்கு மிகவும் சிறந்தது.

100 கொண்ட பாட்டில் விலை ரூ. 5—0—0

**ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்**

**திருவாரூர்.**

184358

Regd. No. M. 6180

# அரிய சந்தர்ப்பம் !

"ஹோமியோ பிரகடனம்" சந்தாதார்களுக்கு மட்டிலும், கீழ்க்கண்ட புத்தகங்கள் மிகக் குறைந்த விலையில் அனுப்பப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஹோமியோ கீ நோட்ஸ் | 9 | 8 | 0 |
| 2. | ஹோமியோ சிகிச்சை | 12 | 8 | 0 |
| 3. | மருத்துவம் | 3 | 8 | 0 |
| 4. | இன்ஜெக்ஷன் கைப்புத்தகம் | 0 | 12 | 0 |
| 5. | ஆஸ்த்மா விபரமும், சிகிச்சையும் | 0 | 12 | 0 |
| 6. | க்ஷயம் ,, | 0 | 12 | 0 |
| 7. | மேற்பூச்சு மருந்துகள் | 0 | 6 | 0 |
| | மொத்த விலை ரூ. | 28 | 2 | 0 |

"ஹோமியோ பிரகடனத்"திற்கு சந்தா அனுப்பியிருப்போருக்கு மேற்கண்ட ரூ. 28—2—0 விலையுள்ள புத்தகங்களை ரூ. 20—8—0க்கு மட்டில் தபால் செலவன்னியில் அனுப்பப்படும்.

— விபரங்களுக்கு —

ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்.
"க்ளினிக்" திருவாரூர்.

Printed and Published by : S. SRINIVASAN at the Homeo Color (Power) Press, Tiruvarur.